145

# செங்கல்பட்டு மாவட்டம்,திருக்கழுக்குன்றம் கடம்பாடி ஊராட்சி மன்ற தலைவர், அவர்கள் செயல்முறைகள்

## முன்னிலை - திருமதிசு .தேன்மொழி.Bsc,B.Ed

ந.க.எண். 15/2022/

நாள்.18.10.2022

பொருள் - கட்டிட வரைபட அனுமதி - செங்கல்பட்டு மாவட்டம் - திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒனறியம கடம்பாடி ஊராட்சி ; கிராமம் - சர்வே எண.212/1B - ல் 529.53சதுர மீட்டர் ,குடியிருப்பு கட்டிம் கட்ட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.அரசாணை எண்.255. ஊரக வளர்ச்சி துறை சி2 நாள்.19.08.1997.
2.அரசாணை(நிலை) எண்.18 நகரட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
3.அரசாணை(நிலை)எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.ன
4.அரசாணை(நிலை) எண்.86 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.28.03.2012, அரசாணை எண்.85 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.16.05.2017.
6.R.Jayashree Menon,என்பவர்களின் கடித நாள்.25.07.2022

********

உத்தரவு -

செங்கல்பட்டு மாவட்டம் - திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் - கடம்பாடி ஊராட்சி ; கிராமம் - சர்வே எண.212/1B - ல் 529.53சதுர மீட்டர்,குடியிருப்பு கட்டிம் கட்ட கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த அனுமதியானது18.10.2022முதல்17.10.2023தேதி வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும்.அனுமதி கட்டணம் ரூ.161515-/வங்கி வரைவோலையாக(எண்.932308 ,நாள்.07.10.2022) ஊராட்சியின் பலவகை ரசீது எண்.11002,நாள்.07.10.2022-ன்படி செலுத்தப்பட்டு, அதன் ரசீது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கட்டட தொழிளாலர் நலநிதி, ரூ89245/- யூனியன் பாங்க் ஆ.ஃப் இந்தியா வங்கியில் அண்ணா நகர் கிளை சென்னைக்கு சம்மந்தப்பட்ட கணக்கு எண்ணில் UTRNo.322280393964மூலம் நாள்.14.10.2022அன்று செலுத்தப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்</u>

1. கட்டிடத்தின் நான்கு பக்கங்களிலும் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

73 147

5. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. அனுமதிக்கான வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.
7. கட்டிடம் கட்ட உத்தரவு பொய்ப்பதிவுகள் மூலம் வேறு அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உததரவினை ரத்து செய்ய ஊராட்சி மன்ற தலைவர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களுக்கு உரிமை உண்டு.
8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.
9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து பணிமுடிந்ததற்கான சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.குடியேறிய பின்னர் 15 தினங்களுக்குள் தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.
10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

S. Thenmozhi 18/10/22

ஊராட்சி மன்ற தலைவர்
கடம்பாடி ஊராட்சி.

பெறுநர்

R.Jayashree Menon
Villa B/C,BBCL Sandshore,
MGR Salai,Palavakkam-600041